## முதன்மை சார்பு நீதிமன்றம், திருப்பூர்.

**E.A. No. 228/2019 in E.P. No. 38/2010**
திரு. சந்திரசேகர் (P.W. –1) **23.08.2023.**

**<u>சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு 6 ஆம் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை :</u>**

1. சாட்சி ஆஜர். சாட்சி சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டார். உயர்நிதிமன்றத்தில் நிலுவையில் இருக்கும் பொழுது குழந்தையம்மாள் என்பவரிடம் நான் Madeover வாங்கினேன் என்றால் சரிதான். தற்போதும் முதல் மேல்முறையீடு சென்னை உயர் நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ளது என்றால் சரிதான். நிலுவையில் உள்ள மேல்முறையீட்டில் என்னை தரப்பினராக சேர்க்க நான் மனு எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. அதற்கான மனுவை தாக்கல் செய்துள்ளேன். அந்த மனு உத்தரவு ஆகாமல் நிலுவையில் உள்ளது என்றால் சரிதான். அவ்வாறு நிலுவையில் உள்ளதற்கான ஆவணங்கள் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். மேல்முறையீட்டில் குழந்தையம்மாளுக்கு பதிலாக என்னை தரப்பினராக சேர்க்காத சூழ்நிலையில் இந்த மனுவை தாக்கல் செய்ய எனக்கு சட்டப்படி அதிகாரம் இல்லை என்றால் சரியல்ல.

2. தாவாச்சொத்திற்கு இந்த 6 ஆம் எதிர்மனுதாரர் உரிமையாளர் என்று கீழமை நீதிமன்றம் விளம்புகை செய்துள்ளது என்றாலும் ஆகவே நான் குழந்தையம்மாள் என்பவரிடம் பணத்திற்காக வாங்கப்பட்ட தீர்ப்பின் படி நான் Made over வாங்கியது சட்டப்படி செல்லாது என்றால் சரியல்ல. குழந்தையம்மாளுக்கு மனுச்சொத்தில் சட்டப்படி உரிமையில்லாத போது அதன் படி நான் குழந்தையம்மாள் அவர்களிடம் இருந்து Made over சட்டப்படி செல்லாது என்றால் சரியல்ல. இந்த மனுவில் குழந்தையம்மாள் தரப்பினராக இல்லாத போது அதன் அடிப்படையில் நான் குழந்தையம்மாளிடம் பெற்ற Made over சட்டப்படி செல்லாது என்றால்

சரியல்ல. ஆகவே இந்த மனு சட்டப்படி நிலைநிற்கத்தக்கதல்ல என்றாலும் அதன் அடிப்படையில் மனு தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றாலும் சரியல்ல.

சாட்சியின் கூற்று என் முன்னிலையில் தட்டச்சு செய்யப்பட்டு, படித்துக் காண்பிக்கப்பட்டது. சாட்சி சரியாக உள்ளதென ஒப்புக் கொண்டு கையொப்பமிட்டார்.

ஓம்/- பா.செல்லதுரை.,
முதன்மை சார்பு நீதிபதி,
திருப்பூர்.